O .S. No. 139/2016

Date: 22.08.2025

பி.வா.சா.1, ஆசிர்வாதம்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் எனது தாயாருக்கும் எனது தந்தைக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனதுதாய் 13.07.1982 ல் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் எங்கள் மற்றொரு சகோதரர்கள் வேதநாயகம், அசரியா எனது அப்பா சாமுவேல் நன்கொடை பத்திரம் பிறப்பித்து கொடுத்தார் என்றால் சரிதான். எனது அப்பா சாமுவேல் பிராதில் கண்ட அவருக்கு பாத்தியப்பட்டசொத்துக்களை பொறுத்து 24.12.1996 ன் தேதியில் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் எங்கள் மற்றொரு சகோதரர்கள் வேதநாயகம், அசரியா எனது அப்பா சாமுவேல் நன்கொடை பத்திரம் பிறப்பித்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி நன்கொடை பத்திரங்களின் படி நாங்கள் அனைவரும் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் நன்கொடைக்கு முன்பே சொத்துக்களை பிரித்து அனுபவித்து வந்தோம். மேற்படி சொத்தை எந்த வருடம் பிரித்து கொண்டோம் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி சொத்தை எனது அப்பா 5 மக்களுக்கும் பிரித்து கொடுத்தார். மேற்படி சொத்தை பிரித்துது கொடுக்கும் போது எழுத்து மூலமாக எழுதவில்லை. மேற்படி பாகப் பிரிவிரனையில் யார் யாருக்கு எந்த சொத்து என்று எனது பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. யார் யாருக்கு எந்த சர்வே எண்கள் ஒதுக்கப்பட்டது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் என்னால் சொல்லமுடியாது. அவ்வாறு பாகப்பிரிவினை செய்து அனுபவித்து வருவதை காண்பிப்பதற்கு பட்டாக்களோ தீர்வைகளோ செலுத்தியதற்கு ஆவணம் எதுவும் பெறவில்லை. வாதி எங்களுடைய

மற்றொரு சகோதரர் அசரியாவுக்கு பாத்தியப்பட் பாகத்தை பதிவு கிரயம் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அவ்விதம் கிரயம் பெற்ற விவரம் கிரய காலத்திலேயே தெரியும். அந்த கிரய ஆவணத்தை நான் பார்க்கவில்லை. வாதியுடன் நான் பேசமாட்டேன். என்னுடைய மற்றொரு சகோதரர் வேதநாயகம் இறந்து விட்டார். மேற்படி வேதநாயகத்தின் வாரிசுகள் தான் 3 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகளுடன் நான் பேசிக்கொள்வேன். வாதியுடன் நான் என் அப்பா இறந்ததிலிருந்து பேசமாட்டேன். வாதி எனது அப்பா இறுதிச் சடங்கிற்கு ரூபாய் தரவில்லை என்பதால் பேசமாட்டேன். இந்த வழக்கில் கண்ட வாதி வாதியின் மகன் 4,5 பிரதிவாதிகள் ஆகியோர் மீது குருவிகுளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகாரின் பெயரில் குற்ற எண் 151/2016 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல்அறிக்கை ஒளிநகலில் கண்ட கையொப்பம் என்னுடையது தான். **குருவிகுளம் காவல் நிலையத்தில் பதிவு செய்யயப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஒளிநகல் வா.சா. ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதி மாசிலாமணி ஹாலோ பிளாக் கட்டிடம் மற்றும் வீடு கட்டியுள்ளது 4 ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ள 16 வது அயிட்ட சொத்து பொதுவான சொத்தா என்றால் எனது பாகத்திற்கு ஒதுக்கப்படட சொத்தில் ஹாலோ பிளாக் கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. தெற்கு குருவிகுளம் கிராமத்தில் உள்ள சொத்தில் தான் வாதியும் 4 ம் பிரதிவாதியும் வீடு கட்டியுள்ளார்கள். மேற்படி இடம் அவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்ட இடம் ஆகும் . ஹாலோ பிளாக் கட்டிடம் தெற்குகுருவிகுளம் கிராமத்தில் தான் உள்ளது. மேற்படி சொத்து 1 ஏக்கர் 60 விஸ்திரம் கொண்டது. மேற்படி இடத்தில் யார் யாருக்கு எவ்வளவு பிரித்தோம் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. ஹாலோ பிளாக் கட்டிடம் மற்றும் வீடு வாதி தனது

சொந்த பணத்தில் கட்டியுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்த மதிப்பு ரூ. 50 லட்சம் போகும். ரூ. 50 லட்சம் போகும் என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் எழுமிச்சை பயிர் செய்வதற்கு தேவையான வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லலை. நான் எனது மனைவியான 7ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எந்த ஆண்டில் எழுதிக் கொடுத்தேன் என்றால் 2011 ம் ஆண்டில் கொடுத்தேன். எந்தஆவணத்தின் அடிப்படையில் செட்டில்மெண்ட் ஆவணத்தை பிறப்பித்து கொடுத்தேன் என்றால் எனது பாகத்தை பிறப்பித்து கொடுத்தேன். பி.வா.சா.ஆ. 2 முதல் 5 ஆவணங்களில் கண்ட குற்ற வழக்குகள் எங்களுக்குள் சமாதானமாக பேசி முடிக்கப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. பிராதில் கண்ட சொத்துக்கள் எக் காலத்திலும் பாகப் பிரிவினை செய்து கொள்ளபடவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா எங்களுக்கு சொத்தை பாகப் பிரிவினை செய்து கொடுத்தார் என்பது பொய் என்றால் சரியல்ல. பிராதில் கண்ட சொத்துக்கள் முந்தைய ஆவணங்களின்படி பொதுவாக அனுபவித்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. பிராதில் கண்ட சொத்துக்களில் அசரியாவுக்கு உள்ள பிரிவினை இல்லாத பாகத்தை பொறுத்து மேற்படி வாதிக்கு 18.07.2012 தேதியில் பதிவு கிரய ஆவணம் செய்து கொடுத்து வாதி அவருக்கு உரிய பாகத்தையும் கிரயம் பெற்ற பாகத்தையும் இதர பங்காளிகளான அனைவருடன் கூட்டாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அசரியாவுக்கு உள்ள பாகத்தை வாதிக்கு கிரயம் கொடுத்ததன் பெயரில் நான் விரோதம் கொண்டு வாதியுடனும் வாதி குடும்பத்துடனும் வீண் தகராறு செய்து பல்வேறு பொய் வழக்குகளை நானும் எனது மனைவியும் சேர்ந்து வாதி மீதும் வாதி குடும்பத்தின் மீதும் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எனவே வாதி

இனியும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவிக்க முடியாத காரணத்தால் வாதிக்குரிய பாகத்தை பிரிவினை செய்வதாக கூறி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு தெரியாமல் எனது மனைவியான 7ம் பிரதிவாதிக்கு பிரிவினை இல்லாத சொத்தை கொடுத்து மோசடியாக பதிவு செட்டில்மெண்ட் ஆவணத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை கொடுப்பதற்கு எனக்கு எந்தவிதமான தனிப்பட்ட உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் ஊர்ஜிதத்திற்க வராத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் மூலம் 7ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் அனுபவமும் ஏற்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக தாவா சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டதாகவும் தாவா சொத்தின் மதிப்பு ரூ. 50 லட்சம் பெறும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ. 2 முதல் 5ல் கண்ட குற்ற வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 16 வது அயிட்ட சொத்தில் வாதியால் சொந்த செலவில் ஏற்படுத்ததப்பட்ட கட்டிடங்கள் பிரிவினை இல்லாத பொது இடத்தில் அனுபவ சௌகாரியத்திற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கட்டிடம் வாதிக்கு ஒதுக்கி கொடுக்கப்பட்டது என்று நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு சரியாக மதிப்பிடப்பட்டு சரியான ஆளுகைக்குட்பட்டு நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 5ல் 2 பங்கு வாதிக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.